இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 194 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 11 – ஞாயிற்றுக்கிழமை 23 பிப்ரவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 194: Thiruvalluvar Year - 2056 - Maasi 11 - Sunday 23 February 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூரில் நடைபெற்ற அரசு விழாவில், 386 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 44,689 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வெ.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், தி.வேல்முருகன், இராதாகிருஷ்ணன், சிந்தனைச்செல்வன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கல்வியில் அரசியல் செய்வது யார்?

## முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய பா.ஜ.க. அமைச்சருக்கு விடுக்கும் வினா!

**கடலூர், பிப்.23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், "கல்வியில் அரசியல் செய்வது யார்?" என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சருக்கு வினாத் தொடுத்தார்.**

**இம்மாபெரும் அரசு விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

உங்களை எல்லாம் பார்க்கும்போது, நம்முடைய எம்.ஆர்.கே.பன்னீர்செல்வமும், சி.வி.கணேசனும் கடலூரில் மனிதக் கடலையே உருவாக்கியிருக்கிறார்கள் என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது!

சோழர் காலத்தில், கடல் வாணிபம் செழித்த ஊர்! புனித டேவிட் கோட்டை அமைந்துள்ள ஊர்! கருணையே வடிவான வள்ளலார் வலம் வந்த மாவட்டம்! தமிழ்நாட்டின் புது வரலாற்றுக்குத் தொடக்கமாக அமைந்த, நீதிக்கட்சியின் ஏ.சுப்பராயலு ரெட்டியார் பிறந்த மாவட்டம் இந்த கடலூர் மாவட்டம்! இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த மாவட்டத்தில், இந்த அரசு விழாவை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த மண்ணின் மைந்தர்களான வேளாண் துறை அமைச்சர் ஆருயிர்ச் சகோதரர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அருமைச் சகோதரர் சி.வி.கணேசன் அவர்களையும் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

அமைச்சர்கள் பன்னீர்செல்வம், கணேசன் ஆகியோரது வழிகாட்டுதல்களின் படி, நம்முடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவர், அதேபோல் அவருக்குத் துணை நிற்கக்கூடிய அனைத்துத் துறைகளின் அதிகாரிகள், அலுவலர்களின் செயல் வேகத்தோடு இந்த விழா மிகப்பெரிய எழுச்சியோடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமான அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன்; அவர்களுக்கு எல்லாம் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கலைஞர் ஆட்சிக் காலத்தில் – கடலூர் மாவட்டத்திற்கு ஏராளமான திட்டங்கள்!**

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைகின்ற போதெல்லாம் இந்த கடலூர் மாவட்டத்திற்கு ஏராளமான திட்டங்கள் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது. கடலூர் மாவட்டத்திற்கு கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏராளமான சாதனைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அதில் முக்கியமான சிலவற்றை நான் சொல்லவேண்டும் என்றால்,

- கடலூர் மாவட்டமும், நாகை மாவட்டமும் இணையும் கொள்ளிடத்தில் 52 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டிய அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு!
- பண்ருட்டியில் அண்ணா பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி!
- சோனம் குப்பம், சொத்தி குப்பம், தாழங்குடா போன்ற பகுதிகளுக்கு ஆற்றின் மீது மேம்பாலங்கள்!
- உறையூரில் துணைமின் நிலையம்!
- நெல்லிக்குப்பத்தில் புதிய பேருந்து நிலையம்!
- பண்ருட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்!
- கடலூரில் மாவட்ட காவல்துறை அலுவலகம், நீதிமன்றக் கட்டடம், வட்டாட்சியர் அலுவலக கட்டடம்!
- காட்டுமன்னார் கோயிலில் வட்டாட்சியர் அலுவலகம்!
- குறிஞ்சிப்பாடி புதிய தாலுகாவாக உருவாகியது!
- குறிஞ்சிப்பாடியில் புதிய மருத்துவமனை!
- திருப்பாதிரிப்புலியூர் சுரங்கப்பாதை, ரயில்வே மேம்பாலம்!

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

**கடலூர் மாவட்டத்திற்கு – முதல்வரின் 10 புதிய அறிவிப்புகள்!**

இந்தப் பணிகளின் தொடர்ச்சியாக, இந்த விழாவின் மூலமாக பத்து அறிவிப்புகளை நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

- முதல் அறிவிப்பு – திட்டக்குடி மற்றும் விருத்தாச்சலம் பகுதிகளில் இருக்கின்ற வேளாண் பெருமக்கள் பயன் பெறும் வகையில், 130 கோடி ரூபாய் செலவில் வெலிங்டன் ஏரியில், கரைகளை பலப்படுத்துவது, வாய்க்காலை புனரமைப்பது போன்ற மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.
- இரண்டாவது அறிவிப்பு – கடலூர் மாநகராட்சியில் இருக்கின்ற மஞ்சக்குப்பம் மைதானம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்தப்படும்.
- மூன்றாவது அறிவிப்பு – நம்முடைய தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும் – சட்டமன்ற உறுப்பினருமான திரு. வேல்முருகன் அவர்கள் சட்டமன்றத்தில் தொடர்ந்து கோரிக்கையை எழுப்பினார். எங்களுக்குக் கூட சில நேரம் கோபம் வந்தது. ஆனால் அந்த கோபம் இருக்கக்கூடிய இடத்தில் தான் குணம் இருக்கும் என்று சொல்வார்கள். எனவே, அந்த உணர்வோடு நான் இங்கே மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். பண்ருட்டி தொகுதியில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.வேல்முருகன் அவர்களின் கோரிக்கையை ஏற்று, 15 கோடி ரூபாய் செலவில் அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும்.
- நான்காவது அறிவிப்பு – புவனகிரி மற்றும் சிதம்பரம் பகுதி மக்களுக்கு பயனளிக்கும் வகையில், முட்லூரில் இருந்து சேத்தியாத்தோப்பு வரை இருக்கும் இரண்டு வழிச்சாலை நான்கு வழிச்சாலையாக 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.
- ஐந்தாவது அறிவிப்பு – நெய்வேலி பகுதியில், கெடிலம் ஆற்றங்கரையில், செம்மேடு, சிறுவத்தூர், எலந்தம்பட்டு கிராமங்களில் 36 கோடி ரூபாய் செலவில் வெள்ளத்தடுப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ஆறாவது அறிவிப்பு – திருவந்திபுரம் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் பயன்பெறும் வகையில், எம்.புதூர் முதல் திருவந்திபுரம் வரை உள்ள சாலை, 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.
- ஏழாவது அறிவிப்பு – குறிஞ்சிப்பாடியில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.
- எட்டாவது அறிவிப்பு – காட்டுமன்னார் கோயில், சிதம்பரம் மற்றும் புவனகிரி பகுதிகளுக்கு பாசன ஆதாரமாக விளங்கும் வீராணம் ஏரி மேம்படுத்தப்பட வேண்டும் என்ற

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### 'மண்ணும் செழித்தது; மக்களும் மகிழ்ந்தார்கள்' - என்ற வரலாற்றை உருவாக்கியவர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்!



தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த பெருமைக்குச் சொந்தக்காரர் நம்முடைய எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்!

தலைவர் கலைஞரால் "வேங்கை" என்று அழைக்கப்பட்ட எம்.ஆர். கிருஷ்ண மூர்த்தியின் மகன்! வேங்கையின் மைந்தன்! அவரது பெயரைத்தான், சேத்தியாத்தோப்பில் இருக்கின்ற 'கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு'தலைவர் கலைஞர் சூட்டினார்!

நம்முடைய திட்டங்களால் "மண்ணும் செழித்தது; மக்களும் மகிழ்ந்தார்கள்" என்ற வரலாற்றை உருவாக்கி இருப்பவர் தான், நம்முடைய எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள்!

### வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் - பல லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியவர் சி.வெ.கணேசன்!



நம்முடைய சி.வி. கணேசன் அவர்கள், தொழிலாளர்களின் தோழனாக பாட்டாளிகளின் பாதுகாவலனாக ஒடுக்கப்பட்டோரின் ஒளிவிளக்காக நம்முடைய அரசு செயல்பட துணையாக இருக்கக்கூடியவர்!

தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது மட்டுமல்ல; இளைஞர்களை திறன் மிக்கவர்களாக வளர்த்தெடுத்து, அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி வழங்கிக் கொண்டிருக்கிறார் நம்முடைய கணேசன் அவர்கள்! மாவட்டம்தோறும் அவர் முயற்சியால் நடத்தப்படும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது.

---

### எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி!

# உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி!

## உலகத் தாய்மொழி நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, பிப்.23-**

**உலகத் தாய்மொழி நாள் நேற்று முன்தினம்! இந்நாளையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி! உலகெங்கும் பரவட்டும் நம் உயர் தனிச் செம்மொழி!" எனச் சூளுரைத்துள்ளார்.**

உலகத் தாய்மொழி நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி!**

**இலக்கியங்களில் புதைந்திருந்த வரலாற்றினை மண்ணில் அகழாய்ந்து நிறுவி வருகிறோம்!**

**அகத்திலும் புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் நற்றமிழர் தாய்மொழி, போற்றுதலுக்குரிய பழமை உடைய மொழி மட்டுமல்ல; பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழி!**

**உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி!**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அண்ணாமலையின் 'அந்த வாய்!'

